**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.24/2017 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.4 |
| Name : | | ராஜா |
| Father's/Husband Name: | | மணி |
| Village : | | பூலாம்பாடி |
| Taluk : | | |
| Age : | | 40 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 29.07.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 2017–ம் வருடம் மதியம் 2.30 மணியளவில் அ.சா.1ன் வீட்டிற்கு அருகில் நிறைய பேர் நின்று கொண்டு இருந்தார்கள். அப்போது போலிசார் நாங்கள் வந்து விசாரித்தற்கு சாட்சியாக இருங்கள் என்று சொன்னார்கள். நான் என்ன கேள்விபட்டேன் என்றால் எதிரியிடம் அ.சா.1 பணம் வாங்கி இருக்கிறார் என்றும் எதிரி பணத்தை கேட்டதால் சண்டை வந்ததாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிஸ் விசாரணையில் சொன்னதை தான் தற்போது நீதிமன்றத்திலும் கூறுகிறேன் என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி, மாதம் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். அவர்களுக்குள் உள்ள கொடுக்கல் வாங்கல் பற்றி நான் நேரடியாக கேள்விப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்றால் இல்லை அவர் கார் ஓட்டும் வகையில் பழக்கம். அ.சா.1 எந்த செலவுக்காக எதிரியிடம் பணம் வாங்கினார் என்பது குறித்து நான் கேள்விப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தது குறித்து யார் சொன்னார்கள் என்பது பற்றி போலிஸ் விசாரணையிலும் நீதிமன்ற விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன என்ன கேள்விபட்டேன் என்று குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது என்றால் பணம் வாங்கினார்கள் என்று கேள்வி பட்டேன். எந்த தேதியில் எந்த போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் இல்லை.

போலிசார் என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கி கொண்டு சென்றார்களா என்றால் இல்லை. முகவரி மட்டும் வாங்கி சென்றார்கள்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.24/2017 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | **அ.சா.5** |
| Name : | | குமார் |
| Father's/Husband Name: | | **பெரியசாமி** |
| Village : | | **பூலாம்பாடி** |
| Taluk : | | **வேப்பந்தட்டை** |
| Age : | | 42 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 29.07.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்து 23.04.2015–ம் தேதி மதியம் 2.30 மணியளவில் போலிசார் அ.சா.1 வீட்டுக்கு அருகில் வந்து வரைபடம் வரைந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்னுடன் தர்மலிங்கம் என்பவர் கையெழுத்து போட்டார். பின்பு எதிரியின் வீட்டில் இருந்து பாண்டுபத்திரம் எடுத்தார்கள். எதிரியின் வீட்டில் இருந்து 2 empty பாண்டுபத்திரம் எடுத்தார்கள் அதில் கையெழுத்து மட்டும் இருந்தது. அதிலும் என்னுடன் தர்மலிங்கம் கையெழுத்து செய்தார். மேற்படி பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது, போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்த போது என்ன சொன்னேனோ அதை தான் தற்போது நீதிமன்ற விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் போலிஸ் விசாரணையிலும் பாண்டை எதிரியின் வீட்டில் இருந்து தான் கைப்பற்றினார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த பாண்டில் என்ன எழுதியிருந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் வெங்கடேஷ் கையெழுத்து தான் இருந்தது. அந்த பாண்டுகளில் கவிதாவிற்கு பணம் கொடுக்க வேண்டும் என்றும் சாட்சி கையெழுத்து போட்ட விவரம் மற்றும் தேதி ஆகிய விவரங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி பாண்டுகளில் எவ்வளவு தொகை தர வேண்டும் என்ற தொகை

விவரம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பாண்டுகளில் எழுதியவர் பெயர் யார் என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் எந்த குற்ற எண்ணில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் திருவள்ளுவர் தெருவா, கரிகாலன் தெருவா என்றால் சம்பவம் நடக்கும் போது திருவள்ளுவர் தெருவில் இருந்தேன். அ.சா.1 எனக்கு சொந்தமா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த போது எத்தனை பேரிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் 5 பேரிடம் வாங்கினார்கள். எந்த போலிசார் கைப்பற்றினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். நானும் எனது அண்ணனும் எந்த வேலைக்காக அங்கு சென்றோம் என்று போலிஸ் விசாரணையிலும் நீதிமன்ற விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2 பேப்பரில் நான் கையெழுத்து போட்டதாக சொல்வதில் அதில் என்ன எழுதியிருக்கிறது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். என்னிடம் லேப்டாப்பில் தட்டச்சு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை கையில் எழுதி வாங்கினார்கள். என்னிடம் போலிசார் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. வெங்கடேசன் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.